9th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி குறிப்பான தகவல் ஒன்றும் அரசாங்கத்திற்கு இல்லை.

திரு. கரு. சிமைச்சாமி : பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தைப் பற்றி.. . . . .

MR. SPEAKER : The original question relates to the University but the hon. Member goes on referring to Panchayat Unions.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்வி சம்பந்தமான கேள்வியாக இருந்ததால், "பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடம்" என்று கனம் அங்கத்தினர் சொல்லும் பொழுதே, பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கூடம் என்று நான் எடுத்துக்கொண்டு பதிலளித்தேன்.

திரு. கே. மூக்கையா தேவர் : மதுரையில் பல்கலைக் கழகம் நிறுவுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டாலும்கூட, இடம் தேர்ந்தெடுப்பது போன்ற ஆரம்ப வேலைகளாவது நடந்து கொண்டிருக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டதாக நான் சொல்லவில்லை. "புதிய பல்கலைக் கழகத்தை ஏற்படுத்து வது சம்பந்தமான விவரங்களை ஆராய்ந்து அரசாங்கத்திற்குச் சிபார்சுகள் செய்வதற்கு மாநிலக் கல்வித் துறை இயக்குநர் தலைமையில் நிபுணர் குழு ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளோம்" என்று நான் குறிப் பிட்டேன்.

திரு. ஆ. தங்கவேலு : மதுரையில் கட்டப்பட இருக்கும் பல்கலைக் கழகம் தேவஸ்தான நிதியிலிருந்து எடுத்து கட்டப்படுமா அது பற்றிய யோசனை இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேவஸ்தானத்திலிருந்து நிதி ஒதுக்குவதாக இருந்தால், ஏதோ ஓரளவு அவர்கள், குறிப்பிட்ட வகைக்கு உதவியளிக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : காஞ்சிபுரத்தில் பல்கலைக் கழகக் கட்டடமும் ஹாஸ்டலும் கட்ட வேண்டுமென்று ஒரு திட்டமிருந்தது. அது இப்பொழுது எந்த நிலையில் இ க்கிறது. அதைக் கட்ட அரசாங்கத் திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காஞ்சிபுரத்தில் பல்லவர் காலத்தில் பல்கலைக்கழகம் இருந்தது. இப்பொழுது பல்கலைக் கழகம் மீண்டும் அமைப் பதாக உத்தேசம் இல்லை. ஆஸ்பத்திரி இருக்கிறது. அது விரிவுப்படுத்த படும்.

Block formation

* 176 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal for the formation of one Block for each Assembly Constituency; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : வட்டாரங்களில் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களில் பல பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து அதிகாரிகளைக் குறைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

[9th March 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது பற்றிய மான்யம் விவாதத்திற்கு வரும்போது, கனம் அங்கத்தினர் குறிப்பாக எந்த எந்த உத்தியோகஸ்தர்களை எடுத்துவிடலாம் என்று யோசனை சொன்னால் அரசாங்கம் பரிசீலனை செய்து அவசியமா என்பதைப் பற்றி கவனிக்கலாம்.

திரு. ஆ. தங்கவேலு: மின்சாரம் சீக்கிரமாகக் கிடைக்கும் என்ற காரணத்தால் பஞ்சாயத்து யூனியன்களில் கடன் வாங்கி, ஓராண்டுக்கு முன்னதாகவே பம்பு செட் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் மின்சாரம் கிடைக்கவில்லை. என்றாலும், பஞ்சாயத்து யூனியனில் உள்ளவர்கள் பணத்தைக் கட்டும்படி நோட்டீஸ் அனுப்புகின்றார்கள். மின்சாரம் கொடுத்த பிறகு பணத்தை வசூலிக்கும்படியாக அரசாங்கம் உத்திரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மின்சாரத்தைப் பற்றிய மான்யம் விவாதத்திற்கு வரும்பொழுது அதைப்பற்றி பேசலாம்.

Pump sets

*177 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to extend the time for the repayment of the agricultural loans advanced for the installation of pump sets?

THE HON. SRI V. RAMIAH: No, Sir.

திரு. எஸ். முருகையன்: இப்பொழுதிருக்கும் தவணை முறையில் கூட, சொந்த நிலம் இல்லாமல் குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகளுக்கும் இதுபோன்ற வசதிகள் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா: இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில், "தவணையை நீட்டிக் கொடுப்பது இல்லை" என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதற்குக் கூட்டுறவுக் கடன் விநியோக அமைப்பிலே இடம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இப்பொழுது பம்ப் செட் கடனுகக் கொடுப்பதில் எத்தனையோ கஷ்டங்கள் விவசாயிகளுக்கு இருக்கின்றன. அவைகளை நிவர்த்தித்து, சுலபமான முறையில் அவர்களுக்குக் கொடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

(பதில் இல்லை.)

திரு. ஆ. தங்கவேலு: மின்சார பம்ப் செட்டுகளுக்காகக் கடன் வாங்கிய தொகையை, மின்சாரம் கொடுப்பதற்கு முன்னடியே வசூல் செய்ய நோட்டீஸ் அனுப்புகிற காரணத்தால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அதனால், மின்சாரம் கொடுத்த பிறகு வசூல் பண்ணுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் அவர்கள் கூறக் கூடிய ஆலோசனையைத் தனியாக எழுதியனுப்பினால், அதை நான் கவனிக்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: மழையை நம்பியிருக்கிறவர்கள் பல மாவட்டங்களில் இருப்பதால், மழை பெய்யாத காரணத்தால் கஷ்டத்திற்கு உள்ளாகக் கூடிய அத்தகைய பிரதேசங்களுக்குச் சலுகை விஸ்தரிக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா: பாதிக்கப்பட்ட மக்களுக்கு அப்போதைக்கப்போது கடன் வசூலை ஒத்திவைத்துத்தான் வருகிறோம்.